C.C 165/19
PW 1
பெயர் சுஜாதா
தேதி 17.08.23
(எதிரி ஆஜர். )

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தொலைவழி கல்வி மூலம் எம்பிஏ வரை படித்துள்ளேன். என் அப்பா வருமான வரி கட்டி வந்தார். அவர் இறந்து 15 வருடமாகிறது. எனக்கு திருமணத்தின் போது 160 பவுன் நகையும், ரூ.55,000/- ரொக்க பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன். அதற்கு வருமானவரி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது 160 பவுன் நகையும், ரூ.55,000/- ரொக்க பணமும் கொடுக்கப்பட்டது என்பதற்கு என் தாயார் தவிர வேறு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படடுள்ளார்களா என்றால் அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் பெயர் எஸ்என்ஆர்.தர்மராஜா, ராமசாமிராஜா ஆகும். திருமணத்தின் போது 160 பவுன் நகையும், ரூ.55,000/- ரொக்க பணம் வரதட்சணையாக கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. 150 நகையை எப்போது என் கணவர் அடமானம் வைத்தார் என்பதை என்னால் கூறமுடியுமா என்றால் என் திருமணத்திற்கு பிறகும் அதற்கு பிறகும் அவ்வவ்போது வியாபாரத்திற்காக வைத்தார். அவ்வாறு நகைகளை அடமானம் வைத்தற்காக சாட்சிகள் யாரும் உள்ளார்களா என்றால் இல்லை. என் நகைகளை எதிரி எப்போது விற்றார் என்பதை என்னால் கூறமுடியுமா என்றால் 1991 லிருந்து 1995 வருடத்திற்குள் இருக்கும். அவ்வாறு நகைகளை விற்றது சம்மந்தமாக இவ்வழக்கிற்கு முன்பு வேறு எங்காவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நகைகளை அடகு வைத்ததாகவும் பின்பு அதை விற்றுவிட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கு கார்வேர்ட்ஸ் கடை வைப்பதற்காக எனது பெற்றோர் 10 லட்சம் கொடுத்தார்கள் என்பதற்கு சாட்சிகள் யாரும் உள்ளார்களா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் கொடுத்தார்கள். அவ்வாறு 10 லட்சம் கொடுக்கவில்லை என்றும் கொடுத்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நான் குடியிருக்கும் வீடு எதிரி காலியிடமாக வாங்கி கட்டியது என்றால் கட்டிடத்துடன் தான் கிரயம் வாங்கினோம் .ஆனால் காலி இடம் என பதிவு செய்யப்பட்டது. எதிரி தான் மேற்படி சொத்தை வாங்கினார் என்றால் நாங்கள் தான் பணம் கொடுத்தோம். நாங்கள் தான் பணம் கொடுத்தோம் என்பதற்கு சாட்சிகள் எதுவும் இல்லை ரொக்கமாக கொடுத்தோம். அதே வீடு சம்மந்தமாக நான் தேனி சார்பு நீதிமன்றத்தில் ஒருவழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் தேனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது எதசாஆ.1. மேற்படி வழக்கில் எதிரி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ.2. மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தரப்பு குறுக்கு விசாரணையில் மேற்படி வீட்டினை கிரயம் வாங்க ராமசந்திரராஜா பணம் கொடுத்து வாங்கியதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் இடம் வாங்குவதற்கு பணம் கொடுத்ததை மட்டும் தான் ஒப்புக்கொண்டுள்ளேன். மேற்படி வீடு எதிரி ராமசந்திரராஜா பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டை தான் ராமசந்திரராஜா எனது பெயரில் தானமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் எந்த சூழ்நிலையில் எதற்காக என்ன சரத்துகளின் அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பது மேற்படி ஆவணத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் ஜெராக்ஸ் காப்பி கொடுத்தேன். திருமணத்திற்கு முன்பு எனக்கு வருமானம் வரக்கூடிய சொத்துகள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை 16 வயதில் திருமணமாகிவிட்டது. திருமணத்திற்கு பிறகு எனக்கு தற்போது வரை வருமானம் வரக்கூடிய சொத்துகள் உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா வழியில் சொத்துகள் உள்ளது. தாவா வீடு உள்ளது. என் அப்பா இறந்தபிறகு என்ன சொத்துகள் வந்தது என்றால் ராஜபாளையத்தில் ஒருவீடு உள்ளது. அதுவுமகூட்டு பாத்தியத்தில் உள்ளது. என் அப்பா வழியில் வந்த சொத்துகளை பந்தகம் செய்தோ அல்லது வேறு எவ்வழியிலோ பணம் புரட்டியுள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா வழி சொத்துகளை விற்று என் மகளுக்கு நகை செய்து திருமணம் செய்து வைத்தேன். என் அம்மா வழியில் எனக்கு சொத்துகள் வந்துள்ளதா என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு என் பேரில் சொத்துகள் வாங்குவதற்கு என் கையில் சொந்த பணம்இருந்ததா என்றால் இல்லை. 1987 டிசம்பர் மாதம் 1 ம் தேதி என் பெயரில் இரண்டு அசையா சொத்துகள் கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரபதிவிற்கு கையெழுத்து செய்யும் போதும் அதை விற்கும் போதும் போனதோடு சரி. அது சம்மந்மாக வேறு எதுவும் தெரியாது. மேற்படி 1.12.1987 ம் தேதியிட்ட பத்திர எண்.909/ 1987 எதசாஆ.3. ஆவண எண்910/1987 ஆவணம் எதசாஆ.4. மேற்படி

இருசொத்துகளையும் எதிரி பணம் போட்டு தான் என் பெயரில் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். 18.11.11ல் ரெப்போ வங்கியில் என பெயரில் 5லட்சம் எதிரி டெபாசிட் செய்தார் என்றால் சரிதான். மேற்படி இடத்தை விற்று என் பெயரில் டெபாசிட் செய்தார். மேற்படி டெபாசிட்டின் வட்டி மாதம் மாதம் என் சேமிப்பு கணக்கில் வந்து சேருவது போல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி டெபாசிட்டை நான் 18.9.13ல் குளோஸ் செய்து பணத்தை எடுத்துவிட்டேன் என்றால் சரிதான. என்னிடம் காட்டப்படுவது மேற்படி டெபாசிட்டின் அக்கவுண்ட் ஸ்டேட்மெண்ட் என்றால் சரிதான். மேற்படி பணத்தை போட்டது எதிரி தான் என்றால் சரிதான். மேற்படி டெபாசிட்டை எதிரியிடம் சொல்லாமலேயே குளோஸ் செய்து எடுத்துவிட்டேன் என்றால் சரிதான். பிரச்சனை ஏற்பட்ட பின்பு தான் குளோஸ் செய்து எடுத்தேன். மேற்படி அக்கவுண்ட் ஸ்டேட்மெண்ட் எதசாஆ 5. தானசெட்டில்மெண்டை இரத்து செய்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் அதன் சான்றிட்ட நகலை முனிசிபல் ஆபிசில் பார்த்தேன். மேற்படி இரத்து செய்த பத்திரத்தை நகல் எடுத்து விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் ஜெராக்ஸ் காப்பியை கொடுத்தேன். என் மகள் ராகவியின் திருமண தேதி 24.10.11 ஆகும். மேற்படி திருமணத்திற்கு என் தாயார் தான் பணம் கொடுத்தார் அவர் எந்த நிலத்தை விற்று கொடுத்தார் என்றால் ராஜபாளையம் டீச்சர்ஸ் காலணியில் உள்ள 2 1/4 ஏக்கர் நிலத்தை பிளாட்டு போட்டு ரூ75லட்சத்திற்கு விற்று கொடுத்தார். எனது மகளுக்கு முழுநகையையும் என் அம்மா தான் செய்தார். கல்யாண செலவை எதிரி செய்தார். என் அம்மா நிலம் விற்ற பணத்தில் தான் நகை செய்தாரா என்று பார்க்க நிலம் விற்கப்பட்ட தேதியை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். என் அம்மா பிளாட்டு போட்டு விற்ற கிரய பத்திரங்களை இந்த வழக்கில் நான் கொடுக்கவில்லை. என் மகளின் திருமணத்திற்கு என் அம்மா நகை போட்டது பொய் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும் வரை நானும் எதிரியும் அந்த வீட்டில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான. எதிரி எழுதிக்கொடுத்த பிறகு எதிரி அதே வீட்டில் தான் குடியிருந்தார். நானும் அதே வீட்டில் தான் குடியிருந்தேன். தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பிறகு பிரச்சனை வருவதற்கு முன்பு இடைப்பட்ட காலத்தில் மேற்படி சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பு வரை மேற்படி சொத்திற்கு நான் தான் உரிமையாளர் என்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும் வரை எதிரி தான் வீட்டிற்குண்டான வீட்டு வரி, குடிநீர் வரி செலுத்தினார். தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பிறகு பிரச்சனை வருவதற்கு முன்பு இடைப்பட்ட காலத்தில் மேற்படி சொத்திற்குரிய வீட்டு வரி மற்றும் குடிநீர் வரி செலுத்தினேனா என்றால் இல்லை. பிரச்சனை ஆகும் வரை எதிரி தான் சொத்திற்குரிய வீட்டு வரி மற்றும் குடிநீர் வரி செலுத்தினார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி வீட்டிற்குரிய சொத்து வரி ரசீதுகள் என்றால் சரிதான். அது எதசாஆ.6. (எண்ணம்-10). என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி வீட்டிற்குரிய குடிநீர் கட்டண ரசீதுகள் என்றால் சரிதான். அது எதசாஆ.7. (எண்ணம்-10). என்னிடம் காட்டப்படுவது தான் மேற்படி வீட்டிற்குரிய மின்கட்டண ரசீதுகள்என்றால் சரிதான். அது எதசாஆ.8. (எண்ணம்-19). தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பிறகு தற்போது வரை எதிரி தான் மின்கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி மின்கட்டணத்திற்குரிய மின்அட்டைகள் என்றால் சரிதான். அது எதசாஆ.9. நான் எப்போதாவது தான் அங்கு வருவேன். வீட்டிற்கான சொத்து வரி மற்றம் குடிநீர் இணைப்பை பெயர் மாற்றம் செய்வதற்காக அபிடவிட்டை எனது கையெழுத்தை போட்டு எதிரி தயார் செய்ததாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. மேற்படி அபிடவிட்டை நான் வழக்கு விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. அது முனிசிபால்டி ஆபிசில் உள்ளது. அதனை பார்த்துள்ளேன். முனிசிபால்டி ஆபிசில் வைத்து பார்த்தேன். தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் அறிவிப்பு அனுப்பி அதை அவர்கள் ஜெராக்ஸ் கொடுத்தார்கள். அதை பார்த்தேன். அதை நான் விசாரணையின் போது போலிசாரிடம் கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அபிடவிட்டில் எனது புகைப்படம் ஒட்டபட்டிருந்தா என்றால் ஒன்றில் எனது புகைப்படம் ஒட்டிபட்டிருந்தது. மற்றொன்றில் இல்லை. மேற்படி அபிடவிட்டில் நோட்டரி பப்ளிக் முன்பு கையெழுத்து செய்ததாக காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. அபிடவிட்டில் நோட்டரி பப்ளிக் பெயர் காட்டப்பட்டிருந்ததா என்றால் ராமகிருஷ்ணன் என்ற சீல் வைக்கப்பட்டிருந்தது. ராமகிருஷ்ணனின் முகவரி காட்டபட்டிருந்ததா என்பதை நான் கவனிக்கவில்லை. அபிடவிட்டின் அசலை நான் நாளது வரை பார்த்துள்ளேனா என்றால் முனிசிபல் ஆபிசில் பார்த்தேன். மேற்படி நோட்டரி பப்ளிக்கிடம் எப்போதவாது விசாரித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கின்விசாரணையின் போது காவல் துறையினர் 2 அபிடவிட்டை என்னிடம் காட்டி கேட்டார்களா என்றால் இல்லை. என்னிடம் காவல்துறையில் இருந்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள் 10 கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்தை யார் முன்னிலையில் எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால்

காவல்நிலையத்தில் வைத்து வாங்கினார்கள். ஆய்வாளரா வாங்கினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 10 வருடங்களுக்கு முன்பு 2013 ல் டிசம்பர் மாதம் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி கையெழுத்தை அதற்கு பின்பு நாளது வரை பார்க்கவில்லை. நான் கையெழுத்து போடும் போது யாராவது சாட்சிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் அவர்கள் பெயர் தெரியாது. காவல்துறையினர் தான் இருந்தார்கள். நான் கையெழுத்து செய்யும் போது தனிநபர்கள் யாரும் இல்லை என்றால் என்னுடைய வழக்கறிஞர் இருந்தார். என்னுடன் இருந்த வழக்கறிஞர் பெயர் சுரேஷ் ஆகும். அவரை தவிர தனியாட்கள் யாரும் இல்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி என் கையெழுத்தை போடவில்லை என்றால் சரியல்ல. நகராட்சியில் கொடுக்கப்பட்ட என் கையெழுத்து அடங்கிய அபிடவிட்டு நான் தான் நோட்டரி பப்ளிக் முன்பு போட்டு கொடுத்த கையெழுத்துகள் என்றால் இல்லை. எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை சம்மந்தமாக கருத்துவேறுபாடு எப்போது ஏற்பட்டது என்றால் என் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இரத்து செய்து என் பெயரில் மேற்கூறியவாறு அபிடவிட்டு தயார் செய்த பின்பு தான் ஏற்பட்டது. அதற்குபின்பு எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சுமார் 6,7 வருடங்கள் கழித்து புகார் கொடுத்தேன்.

நீதிமன்ற நேரமின்மையின் காரணமாக வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.